O.S. No: 55/2022

பெயர் :சண்முகம்

**வா.சா.1**

02-09-2024

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்னை சேகர் என்றும் கூப்பிடுவார்கள் . தாவா மொத்த சொத்தும் தெற்கு பார்த்த வீடு. கிழக்கு பக்கம் உள்ள சின்ன திண்ணை 5 அடி கீழ மேலாகவும், மேற்கு பக்கம் உண்ண திண்ணை 20 அடி கீழ மேலாகவும் உள்ளது . ரோட்டில் இருந்து தெரு வாசல் 10 அடி இருக்கும். தெரு வாசலில் இருந்து முதல் வடபுறமுள்ள நிலை வாசல் படி 15 அடி இருக்கும். முதல் நிலை வாசலுக்கும் இரண்டாவது நிலை வாசலுக்கும் இடையே உள்ள தரை சாதாரண தலை தான் . இரண்டாவது நிலை வாசலுக்கும், 3 வது நிலை வாசலுக்கு முத்தம் உள்ளது . 2 மற்றும் 3 நிலைவாசலுக்கு கிழக்கு பக்கம் சாதாரண தரை தான். 3 வது நிலை வாசல் தாண்டி கிழக்கு பக்கம் ஒரு கக்கூஸ் உள்ளது . அந்த கக்கூஸை 1, 2 பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் எல்லோரும் அனுபவித்து வருகிறோம் . அந்த கழிவறைக்கு வடக்கே ஒரு சிறிய தண்ணீர் தொட்டி உள்ளது . அந்த தண்ணீர் தொட்டிக்கு வடக்கு ஒரு மாடி உள்ளது என்றால் ஆமாம் . மாடி படிக்கும் மேற்கே ஒரு நிலை வாசல் உள்ளது என்றால் ஆமாம். அது 4 வது நிலை வாசல். அந்த நிலை வாசலுக்கு 5 அடி தள்ளி ஒரு இரும்பு கேட் உள்ளது . அந்த கேட்டுக்கு 3 அடி கிழக்கே ஒரு கிணறு உள்ளது. 3 வது நிலை வாசலில் இருந்து வடக்கே எவ்வளவு நாட்டு ஓடு வீடு உள்ளது என்றால் 58 அடி திண்ணையில் இருந்து உள்ளது . நாட்டு ஓடு முடிந்து வடக்கே ஆர்சிசி ஓட்டு கட்டிடம் உள்ளது . அந்த ஆர்சிசி ஓட்டு கட்டிடம் கிழக்கு பார்த்த வாசல் படி . மாடி படி வழியாக முதல் தளத்தில் கட்டிடம் உள்ளது . ஆர்சிசி

கட்டிடம் கட்ட ஒப்புதல் பெறப்பட்டதா என்றால் அண்ணனுக்கு தான் தெரியும் . அண்ணனிடம் தான் நான் பணம் கொடுத்து , அவர் கட்டி கொடுத்தார் . அவ்வாறு 2002 இல் கட்டி கொடுத்தார். 2002 இல் நான் என் அண்ணனிடம் பணம் கொடுத்து அந்த கட்டிடம் கட்டப்பட்டது என்ற விவரத்தை வழக்கிலோ அல்லது அறிவிப்பிலோ சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. ஆர் சி சி கட்டிடத்தின் தெற்கு வடக்கு 30 அடி கிழ மேல் 22 அடி ஆகும். 22 அடி முடிந்து கிழக்கே 7 அடி சந்து உள்ளது. 30 அடி தெற்கு வடக்கு முடிந்தவுடன் கொள்ளை பகுதியில் 120 அடி நீளம் இருக்கும். 4 வது நிலை வாசலுக்கு வடக்கே உள்ள இரும்பு கேட்டுக்கும் கிழக்கே குளியல் அறை உள்ளது என்றால் ஆமாம் . இந்த சொத்து என் அம்மா பெயரில் அப்பா வாங்கியது. என் அம்மா எந்த ஆவணமும் எழுதி வைக்கவில்லை . என் அம்மாவிற்கு 3 பேர் வாரிசுகள். நான் நர்சூர் காபியில் சேல்ஸ்மேனாக இருந்து ஓய்வு பெற்று விட்டேன். என் அண்ணன் செல்வ கணபதி பிஎஸ்என்எல் பெரிய ஆபிசராக இருந்தார். என் சகோதரி பெயர் ருக்மணி. அவருக்கு 1990 இல் திருமணம் ஆனது. என் பெற்றோர் இறந்த பிறகு ருக்மணிக்கு திருமணம் ஆனது . நானும் என் அண்ணனும் சேர்ந்து நடத்தினோம் . ருக்மணி சென்னையில் இருக்கிறார் . செல்வகணபதிக்கு 1 பையன். செல்வகணபதிக்கு மனைவியும் இருக்கிறார் . அவரும் வாரிசு தான். நான் திருச்சி, கடலூர், கடைசியாக கும்பகோணத்தில் நர்சூர் காபியில் வேலை பார்த்திருக்கிறேன் . 2000 இல் ஓய்வு பெற்றேன் . நாட்டு ஓடு பகுதியில் செல்வகணபதி குடியிருந்தார் . தற்போது அவருடைய வாரிசுகள் குடியிருக்கிறார்களா என்றால் அவர்கள் பெங்கலூரில் இருக்கிறார்கள் . என் அண்ணி விஜயலெட்சுமிக்கு 43 பேட்டை வடக்கு தெரு , கும்பகோணம் என்ற

முகவரி தான் பிராதில் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் ஆமாம் . தாவா சொத்தில் தான் 2 ஆம் பிரதிவாதி குடியிருக்கிறார் என்றாலும் வழக்கிற்காக அவர் பெங்கலூரில் இருப்பதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . தாவா வீட்டில் 3 மின் இணைப்புகள் உள்ளன . ஒரு மின் இணைப்பு என் அம்மா ராஜாமணி பெயரிலும் , இரண்டு மின் இணைப்பு என் பெயரிலும் உள்ளது . 2002 இல் வீடு கட்டும் போது ஒன்று என் பெயரில் வாங்கியது . மற்றொன்று 5 வருடம் கழித்து மாடி போர்சனுக்கு வாங்கினேன். இந்த இரண்டு மின் இணைப்புகளும் அண்ணன் தான் வாங்கி கொடுத்தார். இந்த மின் இணைப்புகளை பெறும் போது என் அண்ணனிடமோ , தங்கையிடமோ கையெழுத்து பெறப்பட்டதா என்றால் பெறப்பட்டது . ஆவணங்களை வரவழைத்து பார்த்தால் தெரியும் என்றால் தெரியும் . என் பெயரில் மின் இணைப்பு பெற செல்வகணபதியோ என் தங்கையோ கையெழுத்து செய்யவில்லை என்றாலும் நான் மோசடியாக என் பெயரில் மின் இணைப்புகளை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல . நாட்டு ஓடு கட்டிடம் 1957 இல் கிரையம் வாங்கியது முதல் உள்ளது . தெருவில் இருந்து வடக்கு நோக்கி உள்ள 4 நிலை வாசல்களும் கிழக்கில் இருந்து 2.1/2 அடி தள்ளிதான் ஒரே நேர் வாகாக தெற்கு வடக்காக அமைந்துள்ளது என்றால் சரி . 2020 இல் இருந்து தாவா சொத்தை பாகம் பிரிக்க நான் கேட்டேனா என்றால் இல்லை. எங்களுக்குள் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்டு பதிவாகி உள்ளது . அவ்வாறு பதிவான பத்திரம் தான் வா .சா.ஆ. 1. அதில் சொத்தின் நீளம் அகலம் போட்டிருப்பது சரியானது தான் . வா.சா.ஆ.1 ஆவணத்தில் 18 வது பக்கத்தில் யார் யாருக்கு எவ்வளவு சொத்துக்கள் பிரிக்கப்பட்டது என்று வரைபடம் போடப்பட்டுள்ளது என்றால் ஆமாம் . எனக்கு ஒரே பெண் . மணி பிரியா.

வா.சா.ஆ.1 ஆவணத்தை வரைவு செய்தது , சோமசுந்தரம் தான் செய்தார் . கணினியாக்கம், வரைவு செய்தது என்று ஜி .ராமலிங்கம் என்பவர் கையெழுத்து செய்திருக்கிறார் என்றால் ஆமாம் . பத்திர எழுத்தர் ராமலிங்கத்திடம் ஆரம்பத்தில் இருந்து போய் வரைவு செய்து , விவரங்கள் சொன்னது நானும் என் மகளும் தான் என்றால் இல்லை . ராமலிங்கம் யார் என்றே தெரியாது . இந்த பத்திரத்தில் சோமசுந்தரத்தின் மனைவி மற்றும் அவர் சித்தப்பா பையன் தான் சாட்சி கையொப்பம் போட்டார்கள். சித்தப்பா பையன் பெயர் பாலசுப்ரமணியன். நான் கட்டிய ஆர்சிசி கட்டிடத்தின் அளவு 30 க்கு 22 அடி. 650 சதுரடி என்று வா .சா.ஆ.1 இல் போடப்பட்டுள்ளது என்றால் சரி . என்னுடைய கட்டிடத்தின் வயது 40 என்று போடப்பட்டிருந்தால் அது தவறு . சார் பதிவாளர் அலுவலகத்தில் இன்னார் என்று நிரூபித்தவர் என்ற இடத்தில் சோமசுந்தரத்தின் மனைவியும் , அவர் சித்தப்பா பையனும் தான் கையொப்பம் போட்டார்கள் . இந்த பத்திரத்தில் ஏ , பி. சி என்று 3 செட்டியூலாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம் . ஏ செட்டியூல் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்து. பி- செட்டியூல் என் சகோதரி ருக்மணிக்கு ஒதுக்கப்பட்ட சொத்து. சி- செட்டியூல் சொத்து 1, 2 அயிட்டம் சோமசுந்தரத்திற்கும் அவர் அம்மாவுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து. 3 செட்டியூலிலும் கிழக்கில் 5 அடி தெருவில் இருந்து கொள்ளைவரை நடைபாதைக்கு பொதுவாக வைக்கப்பட்டு தான் எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம் . இந்த பத்திரத்தில் இந்த 5 அடி பொதுவாக அனைவரும் அனுபவித்து கொள்ள வேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம் . வா.சா.ஆ.1 விற்கு முத்திரை தாள் நான் தான் வாங்கினேன் என்றால் இல்லை . வா.சா.ஆ.1 ஆவணம் 20/10/2021 தேதியில் எழுதப்பட்டு ,

அன்றைய தினமே பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி . சார் பதிவாளர் அலுவலகத்தில் தொகை செலுத்தியது சோமசுந்தரம் தான் . வா.சா.ஆ.1 பத்திரத்தில் என்னிடம் தாக்கல் செய்யப்பட்ட அசல் ஆவணத்திற்கு முத்திரை கட்டணமாக 2021 அக்டோபர் 20 ஆம் தேதி இணை சார்பதிவாளர் கும்பகோணம் அலுவலகத்தில் 18420 செலுத்தியவர் என்று என் பெயர் புகைப்படம் கையொப்பம் உள்ளது என்றால் சரி . பதிவு செய்தபிறகு இந்த அசல் ஆவணத்தை கையெழுத்து செய்து பெற்றுவந்தது நான் தான் என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணம் முறைப்படி நான் விரும்பியவாறு நான் சொன்னவாறு தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . பதிவு செய்து 2 மாதம் கழித்து தான் நான் 29/12/2021 தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் ஆமாம். சோமசுந்தரம் 10 நாட்களுக்கு முன்பாக வந்து கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி கொடுக்குமாறு சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். பொது பாதையாக விடப்பட்டள்ள 5 அடியில் தான் மாடி படி, பொது கழிப்பறை, தண்ணீர் தொட்டி ஆகியவை உள்ளது என்றால் ஆமாம் . கிழக்கே கட்டியுள்ள ஆர்சிசி கட்டிடத்தில் கிழக்கு முகமாக ஆர்சிசி சன்சேடு கட்டியிருக்கிறேன் என்றால் ஆமாம் . யாருக்கு இடையூறு இன்றி பொதுவாக வைக்கப்பட்ட 5 அடி இடத்தில் உள்ள மாடி படியை நான் அப்புறப்படுத்துவதாகவும் , கழிவறை தண்ணீர் தொட்டியை அவர் அப்புறப்படுத்துவதாகவும் ஒப்புக்கொண்டோம் என்றால் சரியல்ல. நான் கொடுத்த அறிவிப்பிற்கு சோமசுந்தரம், விஜயலெட்சுமி, ருக்மணி ஆகியோர் சேர்ந்து பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள் . நோட்டீஸ் கொடுத்த பிறகு 06/01/2021 ஆம் தேதி பிரதிவாதிகள் மீது நீதிமன்றத்தில் கேவியேட் தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம் . 05/01/2022 அன்று மாவட்ட

பதிவாளருக்கு வா.சா.ஆ.1 ஆவணத்தை ரத்து செய்ய கோரி கடிதம் எழுதியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த கடிதம் வா.சா.ஆ. 9 ஆகும். வா.சா.ஆ.9 இல் வீடு உள்ள பகுதியை பொது பாதையாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு வாரத்திற்கு முன்பு தான் எனக்கு தெரியவந்தது என்று சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம் . 05/01/2022 அன்று நான் அனுப்பிய அறிவிப்பிற்கு 06/01/2022 அன்று எங்களை விசாரணைக்கு கூப்பிட்டிருந்தார்கள் என்றால் ஆமாம். அவ்வாறு மாவட்ட பதிவாளர் விசாரணை மேற்கொண்டது மூ.மு.எண்.42/ஐ/2022, நாள் 30.11.2022 என்றால் ஆமாம். அவ்வாறு மாவட்ட பதிவாளரிடம் நான் கொடுத்த மனுவில் , நான், பிரதிவாதிகள் மற்றும் வா.சா.அ.1 இல் சாட்சி கையொப்பம் இட்ட அனைவரும் வந்து வாக்குமூலம் கொடுத்தார்களா என்றால் அனைவரும் வந்தார்கள். வாக்குமூலம் கொடுத்தார்களா என்று தெரியாது. நான் கொடுத்த மனுவின் பேரில் 30/11/2022 அன்று மாவட்ட பதிவாளர் ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் ஆமாம் . அந்த உத்தரவு தான் என்னிடம் காட்டப்படும் **பி.சா.ஆ.1 ஆகும்.** அந்த உத்தரவில் இது உண்மையான ஆவணம், போலி ஆவணம் என்பதற்கு மூகாந்திரம் இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் கோர்ட் மூலமாக பார்த்துக்கொள்கிறோம் என்று சொல்லிவிட்டோம். நான் சொன்னவாறு மாவட்ட பதிவாளர் உத்தரவு போடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 யை புகைப்படம் எடுத்தது, போட்டோ கிராபர். எந்த தேதி என்று தெரியாது . போட்டோ கிராபர் பெயர் ரவி . கும்பகோணத்தை சேர்ந்தவர். இந்த புகைப்படம் நான் குறிப்பிட்டு சொல்லும் மாடிபடியை காண்பிக்க கூடியவை. வேறு எதையும் காண்பிக்கக் கூடியவை அல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and

acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.